Department of Wildlife Conservation | No. 811-A, Jayanthipura Road, Battaramulla | Email - dg@dwc.gov.lk | www.dwc.gov.lk

UK International Development
Partnership | Progress | Prosperity

# கிரேட் பேசஸ் மற்றும் லிட்டில் பேசஸ் சரணாலயத்தின்

(மஹா ராவண மற்றும் குடா ராவண)

## முகாமைத்துவ மதிப்பாய்வு

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம்

### இது எதைப் பாதுகாக்கின்றது?



இந்த சரணாலயம், கடலோரத்திலிருந்து 13 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள கிரேட் பேசஸ் பாறை மற்றும் லிட்டில் பேசஸ் பாறை எனப்படும் இரண்டு மணற்கல் மற்றும் சுண்ணாம்புக்கல் பாறைகளைப் பாதுகாக்கின்றது. இந்த பாறைகளில் பலவகையான பவளங்கள், கடல் உயிரினங்கள் (சாம்பல் நிற பவளச் சுறாக்கள், ஆமைகள், சூரை மீன், பவளப் பாறை மீன்கள் போன்றவை) உள்ளன. இப்பகுதி வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாகும். 1870களில் கட்டப்பட்ட இரு விளக்கு கோபுரங்கள் மற்றும் பழங்கால கப்பல் சிதைவுகள் இங்கு காணப்படுகின்றன.







அக்டோபர் 2019ல் விலங்கு மற்றும் தாவர பாதுகாப்பு சட்டத்தின் (அத்தியாயம் 469) கீழ் கடல் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது.

அளவு : 672.8 சதுர கிமீ




### பாதுகாக்கப்பட்ட பகுதியின் முகாமைத்துவ செயல்திறன் பற்றிய மதிப்பாய்வு

ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதி நியமிக்கப்பட்டவுடன், அது எவ்வளவு சிறப்பாக நிர்வகிக்கப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம். முகாமைத்துவ செயல்திறனை மதிப்பிடுவதற்கு பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படலாம். பயன்படுத்தப்படும் மிகவும் பொதுவான முறைகளில் ஒன்று முகாமைத்துவ செயல்திறன் கண்காணிப்பு கருவி (METT-4). இது ஐந்து முகாமைத்துவ கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட 38 கேள்விகளுக்கு பதிலளிப்பதை உள்ளடக்கியது:

**திட்டமிடல்**
பாதுகாக்கப்பட்ட பகுதி சட்டம், வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் ஆகியவற்றின் மதிப்பீடு.

**உள்ளீடுகள்**
வளங்களின் மதிப்பீடு: பணியாளர்கள், நிதியறிக்கை, உபகரணங்கள் மற்றும் வசதிகள்.

**செயல்முறை**
முகாமைத்துவம் நடாத்தப்படும் விதத்தின் மதிப்பீடு.

**வெளியீடுகள்**
முகாமைத்துவ நடவடிக்கைகளை செயல்படுத்துதல்; தயாரிப்புகள்/சேவைகளை வழங்குதல் ஆகியவற்றின் மதிப்பீடு.

**விளைவுகள்**
பாதுகாக்கப்பட்ட பகுதியின் இலக்குகள் அடையப்பட்ட அளவு மதிப்பீடு.

| வாழ்விடம்/இனங்கள் | நிலை | போக்கு |
|---|---|---|
| பவளப்பாறைகள் | நடுநிலை | அறியப்படவில்லை |
| கரையோரப் பறவைகள். | நடுநிலை | அறியப்படவில்லை |




### நாங்கள் செய்தவை

கடல் நாடு கூட்டுறவு திட்டம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புத் துறை (DWC), 22 ஜனவரி 2024 அன்று கிடைக்கும் ஆதாரங்களை ஆய்வு செய்து, DWC ரேஞ்சர் நிபுணத்துவ கருத்துகளைப் பயன்படுத்தி கிரேட் பேசஸ் மற்றும் லிட்டில் பேசஸ் கடல்சார் சரணாலயத்தின் முகாமைத்துவத்தினை மதிப்பிட்டது. இதன் மூலம் நன்றாக செயற்படக்கூடிய மற்றும் முகாமைத்துவத்தினை மேம்படுத்தும் முக்கிய நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

### தொடர்புடைய தரப்புகள்

மதிப்பாய்வில் ஈடுபட்டுள்ள துறைகள்:

அரசாங்கம்

### ஒரு முகாமைத்துவக் கூறுக்கான METT மதிப்பெண்




### அடையாளம் காணப்பட்ட அச்சுறுத்தல்கள்

- சட்டவிரோத மீன்பிடி
- காலநிலை மாற்றம்
- சுற்றுலாத்துறை
- கடற்கரை மேம்பாடு
- தெளிவான ஆட்சிப் பங்களிப்புகள் இன்மை
- கப்பல் பாதைகள்/ கப்பல் போக்குவரத்து




### அடுத்த நடவடிக்கைகள்

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் இந்த மதிப்பீட்டின் முடிவுகளை எதிர்காலத்திற்கான முன்னுரிமைகளைத் தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்தும்

### முக்கிய வெற்றிகள்

1. கடல் சரணாலயம் விலங்கு மற்றும் தாவர பாதுகாப்பு சட்டத்தின் (அத்தியாயம் 469) கீழ் சட்டபூர்வமாக நிறுவப்பட்டது.
2. கடல் சரணாலயத்தின் நோக்கங்களை அடைய விரிவான இலக்குகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
3. இந்தப் பகுதியில் சட்டவிரோத மீன்பிடித்தலை எதிர்த்துப் போராடுவதற்கு DWC, மீன்வளம் மற்றும் நீர்வளத் துறை மற்றும் இலங்கை கடற்படை ஆகியவற்றுக்கு இடையே அரசாங்கங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு உள்ளது.
4. கடல் சரணாலயத்தின் எல்லைகளில் நிலம் மற்றும் கடல் பயன்பாட்டை நிலைநிறுத்தும் சட்டத் திட்டங்கள் ஏற்கப்பட்டுள்ளன.
5. சரணாலயத்தின் அளவு மற்றும் வடிவம் அதன் இலக்குகளை அடைய ஏற்றதாக கருதப்படுகின்றது.

### முகாமைத்துவத்தினை மேம்படுத்தும் முக்கிய நடவடிக்கைகள்

- அடுத்த ஐந்தாண்டுகளுக்கான முக்கிய நிர்வாக நடவடிக்கைகளை கோடிட்டு, தரப்பினர்களின் உள்ளீட்டிற்கான வாய்ப்புகளை வழங்கும் ஸ்மார்ட் (குறிப்பிட்ட, அளவிடக்கூடிய, அடையக்கூடிய, தொடர்புடைய, காலக்கெடு) எனப்படும் முகாமைத்துவத் திட்டத்தை உருவாக்குதல்.
- GPS ஆயத்தொலைவுகள் மற்றும் விழிப்புணர்வு பொருட்கள் மூலம் கடல் சரணாலயத்தின் எல்லைகளைப் பற்றிய புரிதலை மேம்படுத்துதல்.
- கடல் சரணாலயத்தின் முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புக்கு அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் கூட்டு ஒப்பந்தங்களை வலுப்படுத்துதல்.
- சட்டத்தைப் பின்பற்றுதல் மற்றும் அமுலாக்க நடவடிக்கைகளுக்கு தொலைதூர தொழில்நுட்ப வழிமுறைகளை ஆராய்தல்.

டூனா மீன்